
நகர் ஊரமைப்புத்துறை (DTCP)

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்

செங்கப்பள்ளி ஊராட்சி

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி வட்டம், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம், செங்கப்பள்ளி கிராமம் மற்றும் ஊராட்சி க.ச.எண். 541 /1B-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்

இணையதள விண்ணப்ப எண் : NTOU3TLZ | நாள் : 26.01.2023 | அளவு : (1:500)



குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பு : 2.28 ஏக்கர் (அ) 9230.00 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 57 மனைகள்

மனைப்பிரிவின் எல்லை

நிலையிலுள்ள சாலை/அணுகு சாலை

பொது ஒதுக்கீடுகள் : (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டியவை)

I.மனைப்பிரிவு சாலை பரப்பு : 2793.95 ச.மீ

II. பூங்கா :

ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (9230.00 - 2793.95) x (10/100) = 643.60 ச.மீ

ஒதுக்கப்பட்ட பூங்கா பரப்பு அல்லது பூங்கா பரப்பிற்கு ஈடாக அரசு வழிகாட்டு மதிப்பு தொகை : 643.60 ச.மீ(10.00%)பூங்கா பரப்பிற்கு ஈடாக அரசு வழிகாட்டி மதிப்பு தொகை ரூ.85,546/-னை நாள்.22.03.2023 அன்று மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது).

iii) பொது உபயோகம்

A)LOCAL BODY-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (9230.00-2793.95) x (0.5/100) =32.18 ச.மீ

ஒதுக்கப்பட்ட பரப்பு : 42.67 ச.மீ (0.66%)

B)TANGEDCO-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (9230.00-2793.95) x (0.5/100) =32.18 ச.மீ

ஒதுக்கப்பட்ட பரப்பு : 38.19 ச.மீ (0.59%)

கட்டிட வரம்பு:

9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
9.0மீ முதல் 18.0மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ-ம் விடப்படல் வேண்டும்.

மூலை முடக்கு:

12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீx1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
12.0மீ மேல் உள்ள சாலைகளுக்கு 4.5மீx4.5மீ-ம் விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்

1. அரசாணை எண் : 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள் 04.02.2019,மற்றும் அரசாணை எண் : 16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020-ன் படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் LOCAL BODY ஒதுக்கீட்டினை உள்ளாட்சியும் மற்றும் TANGEDCO ஒதுகீட்டினை TANGEDCO அல்லது உள்ளாட்சியும் தானமாகப்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் .
2. அரசாணை எண்.181 மற்றும் அரசாணை எண்.141,வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 09.12.2020 மற்றும் நாள் 16.07.2022- ன் படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார் சாலை வசதி, மழை நீர்வடிகால் வசதி,மேல்நிலை தொட்டி,தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதி மனுதாரரால் அமைக்கப்பட்டு அதனை உள்ளாட்சியால் உறுதிசெய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. இம்மனைப்பிரிவுக்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நிலஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும்,எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் என்றும் உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைஉட்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதில் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்விதமுன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்,சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைகுண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம்/விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6மீ x 1.2மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து யூனியன் பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.

SWP / DTCP / TIRUPPUR / LAYOUT NO : 95/2023

க.அருண்குமார்
அளவர் / உதவி வரைவாளர்

-
வரைவாளர் நிலை - III

க.பத்மா
மேற்பார்வையாளர்

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்.